தினகரன்

## கால்நடைகளுக்கான தீவன சந்தை அமைக்க நடவடிக்கைவேண்டும் விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-06-02 10:32:17

க.பரமத்தி: தமிழக அரசின் இலவச ஆடு வழங்கும் திட்டத்தில் பெறப்படும் கால்நடை களை வளர்க்க தீவன சந்தை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக் கை விடுத்துள்ளனர்.

கரூர் மாவட்டம் க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர், கிழக்கு, மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், புஞ்சைகாளகுறிச்சி, புன்னம், இராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, மேற்கு, தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரம் உள்ளிட்ட 30 ஊராட்சிகளில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழி லாக உள்ளது.

நிலம் உள்ள விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் கால்நடைகளுக்காக கம்புஒட்டுபுல், கினியாபுல், கொழுக்கட்டைபுல், வேலிமால், குதிரை மசால், முயல் மசால் போன்ற தீவன பயிர்களை சாகுபடி செய்கிறார்கள்.

அரசிடம் இலவச கால்நடைகளை பெற்ற, நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் கால்நடைகளை வளர்க்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். அவைகளை தன்னிச்சையாக மேய விடும்போது அடுத்தவர் தோட்டங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதால் வீண் பிரச்னைகள் ஏற்படுகிறது.

எனவே, கால்நடை விற்பனை சந்தை இருப்பது போல, கால்நடைகளுக்கு தேவையான தீவனங்கள் விற்பதற்கு தீவன சந்தை அமைக்க வேண்டும்.

இதனால் கால்நடைகளை தரமாக வளர்க்க முடியும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இயந்திர பழுதுக்கு மாற்று நடவடிக்கை தலைஞாயிறு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை மீண்டும் துவக்கம்

பதிவு செய்த நேரம்:2012-06-02 10:39:22

மயிலாடுதுறை: தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கரும்பு அரவை பணி நேற்று மீண்டும் துவங்கியது.

மயிலாடுதுறை அடுத்த தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சக்கை தள்ளும் இயந்திர பழுது காரணமாக கரும்பு அரவை கடந்த 30ம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. அவற்றை உடனடியாக சரிசெய்ய முடியவில்லை.
இதனால், அன்று முதல் 200க்கும் மேற்பட்ட டிராக்டர்களில் 2000 டன் கரும்பு அரவை செய்யப்படாமல் தேங்கிக்கிடந்தது. பின்னர் தனியார் பொக்லைன் இயந்திரம் கொண்டுவரப்பட்டு கரும்பு சக்கைகள் அப்புறப்படுத்தப்பட்டு கரும்பு அரவை மீண்டும் நேற்று முதல் துவங்கியது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

பதிவு செய்த நேரம்:2012-06-02 11:47:43

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்வரத்து நேற்று மாலை வினாடிக்கு 1644 கனஅடியாக குறைந்தது.
காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 1735 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை 1644 கனஅடியாக அதிகரித்தது.
நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து வினாடிக்கு 1031 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 79.52 அடியாக இருந்தது. அணையின் நீர் இருப்பு 41.48 டிஎம்சி.

## அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம் வேளாண் அதிகாரி விளக்கம்

பதிவு செய்த நேரம்:2012-06-02 10:54:31

சேதுபாவாசத்திரம்: அனைத்து வகை பயிரிகளிலும் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை செய்வது அவசியம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தெரிவித்துள்ளார்.
இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிடுவதற்கும், சிக்கன முறையில் உரமிட்டு உரச்செலவை குறைப்பதற்கும், கண்மாய் வண்டல் அல்லது மணலிட்டு மண் நயத்தை மேம்படுத்துவதற்கும், நுண்ணூட்ட உரமிடுவதற்கும் மண் ஆய்வு அவசியமாகும்.

பயிர் சாகுபடி செய்வதற்கு முன் மண் ஆய்வு செய்ய வேண்டும். முக்கியமாக கோடை காலங்களில் பயிர் இல்லாத தருணத்தில் மண் பரிசோதனை செய்வது சால சிறந்தது.
எரு குவிக்கப்பட்ட இடம், வரப்பு ஓரம், நடைபாதை, வயல் ஓரம், வாமடை பகுதி மற்றும் நீர் தேங்கும் பகுதிகளில் மண் மாதிரி எடுக்கக்கூடாது. ஒரு வயலில் குறைந்தது 10 இடங்களில் மண் மாதிரி எடுக்க வேண்டும். இலை, தழைகளை எடுத்து விட வேண்டும். மேல் மண்ணை அப்புறப்படுத்த கூடாது.
22.5 செ.மீ ஆழம் வரை வி வடிவத்தில் குழி வெட்ட வேண்டும். குழியில் இரு ஓரங்களிலும் 2.5 செ.மீ கணத்திற்கு மேலிருந்து கீழாக சுரண்டி வழித்து மண்ணை சேகரிக்க வேண்டும். அலுமினிய கரண்டி அல்லது மூங்கில் குச்சிகளை பயன்படுத்துவது நல்லது.
சேகரித்த மண்ணை 4 சம பாக முறை அல்லது கால் பங்கீட்டு முறை என்று பெயர். நெல், சோளம், கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ ஆழத்திலும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகள், மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும், தென்னை மற்றும் மரப்பயிர்களுக்கும் 90 செ.மீ ஆழத்திலும், பழ மரங்களுக்கு 150-180 செ.மீ ஆழம் வரையிலும் புல் வகை பயிர்களுக்கு 10 செ.மீ ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.
களர், உவர் நிலங்களுக்கு தனித்தனியாக மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் உழவரின் பெயர், கிராமம் மற்றும் முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிடப்பட்ட பயிரின் பெயர், அடுத்து பயிரிட போகும் பயிரின் பெயர் ஆகிய விவரங்கள் அடங்கிய மண் மாதிரி விவரத்தாளையும், மண் பரிசோதனை ஆய்வகத்திற்கும் அனுப்ப வேண்டும்.
இவ்வாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தெரிவித்துள்ளார்.